

தமிழ்நாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னை வருகை தந்த இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களை நேற்று முன்தினம் (5.8.2023) சென்னை விமான நிலையத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொன்னாடையும், செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தின் மூலம் ஒடியா மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட திருக்குறள் புத்தகத்தையும் வழங்கி வரவேற்றார். உடன் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவைத் துணைத் தலைவர், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### திருக்குறளின் ஒடிய மொழி பெயர்ப்பை வழங்கி

# குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுக்கு வரவேற்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டரில் பதிவு!

**சென்னை, ஆக.7–**

**சென்னை வந்திருந்த குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு அவர்களுக்கு திருக்குற ளின் ஒடிய மொழிப் பெயர்ப்பினை வழங்கியதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களைத் தமிழ் நாட்டுக்கு வரவேற்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

இந்தியக் குடியரசுத்தலை வர் திருமதி திரௌபதி முர்மு அவர்களைத் தமிழ் நாட்டுக்கு வரவேற்று, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் வெளியிட்டுள்ள, நீடுபுகழ் தமிழ்ச் செவ்வியல் இலக்கியமான திருக்குறளின் ஒடிய மொழிபெயர்ப்பினை வழங்கினேன்.

குடியரசுத்தலைவர் அவர்களின் தமிழ்நாடு வருகைக்கு நன்றி.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### தாம்பரம் மாநகர தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் - மலரஞ்சலி!

## மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

*தாம்பரம், ஆக.6*

*தாம்பரம் மாநகரக் கழகத் தோழர்களுக்கு மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அவர்களின் அறிக்கை வருமாறு:-*

*வருகின்ற 7.8.2023, திங்கட்கிழமை காலை 6.30 மணிக்குள் நினைவில் வாழும் நம் நெஞ்சம் நிறைந்த தமிழின தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தாம்பரம் மாநகரத்துக்குட்பட்ட 70 வட்டங்களிலும் கலைஞர் அவர்களின் திருவுருவப்படம் வைத்து மலர்களால் அலங்கரித்து மாலை அணிவித்திடுமாறும் ஏழை எளியோருக்கு மாணவ -மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் கலைஞர் அவர்களின் நினைவுகளை போற்றிடும் வகையில் ஒளி ஒலி அமைத்து பேச்சுக்களையும், பாடல்களையும் அமைத்திடுமாறும் அதன்பின் மேற்சொன்ன நிகழ்வுகளை முடித்துவிட்டு தாம்பரம் மாநகர கழகத்தின் சார்பில் எனது தலைமையில் (எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ.), மேற்கு தாம்பரம் சண்முகம் சாலையில் காலை 7 மணி அளவில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து இதய அஞ்சலி செலுத்த உள்ளோம்.*

*மேற்சொன்ன நிகழ்வில் மேயர், துணை மேயர், மண்டல குழுத் தலைவர்கள், பகுதி கழக செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி உள்ளிட்ட அனைத்து அணிகளில் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*அதைத்தொடர்ந்து தலைநகர் சென்னையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினை விடத்திற்கு சென்று மாலை அணிவித்திட கழகத் தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்கள் கலந்து கொள்கின்ற அமைதி ஊர்வலத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.*

# ஞாலமெலாம் நின்புகழே; நாளெலாம் நின்நினைவே!



ஆயிரம் ஆண்டுகள்
ஆனாலும் அய்யனே,
ஞாயிறு போல்ஒளி
நல்குவாய் மெய்யனே!
கோயிலும் கடவுளும்
கொடியவர் கூடாரம்
ஆயிடக் கூடாதென்று
அனலுரை எழுப்பியே
பாயிரம் தீட்டிய
பகுத்தறிவுப் பெரியாரின்
தீயினும் வெவ்விய
செஞ்சுடர்க் கதிரவனே!
தாயினும் பரிவுடன்
தாங்கிய அண்ணாவை
மேவிய தம்பியருள்
மேலான தம்பியே!
ஆவியாய் உடன்பிறப்பை
அணைத்திடும் தமையனே!
சேயினும் அன்பாகச்
செந்தமிழ் நாட்டினை
ஓயினும் ஓயாமல்
உயர்த்திய புரவலனே!
காயினும் பிறருன்னைக்
கனிவாகப் பொழிந்தவனே!
மாயினும் மாயாமல்
மக்களிடம் எழுந்தவனே!
தேயினும் தேயாத
செந்தமிழ்த் தலைவனே!

ஓயாமல் நாடெங்கும்
உரையாற்றிக் கருத்தூற்றிக்
காயாமல் வளர்த்தநற்
கனியான கழகத்தை
நீயாக விட்டுவிட்டு
நீளத்தான் துயில்வதற்குத்
தாயான அண்ணாவின்
சதுக்கத்தில் ஓரிடத்தே
பாயாத புலியாகப்
பாதுகாக்கப் போனாயோ?

நோவாத நெஞ்சுண்டா?
நொறுங்காத மனமுண்டா?
கூவாத நாவுண்டா?
கூடவராக் குரலுண்டா?

வாயாரப் பாடியே
வளரலைகள் தாலாட்டச்
சேயாக நீகேட்டுச்
சென்றாயோ தேடியே!
தீயான உன்னையொரு
சிறையிலே இட்டாலும்
மாயமாய் எங்கெங்கும்
மணம்பரப்பி விடுவாயே!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

காயமே பொய்யென்று
கலக்கத்தைக்
கொள்ளாமல்
மாயமே வாழ்வென்று
மயக்கத்தில் குழம்பாமல்
ஆயவே, பகுத்தறிவு
தன்மான அறிவுலகின்
வாயிலைத் திறந்துவிட்டு
வாழ்வினைக் காட்டிய
தூயனே! கடலோரம்
துயில்கின்றாய் என்றுரைத்தால்
மாயந்தான் அதுவன்றோ?
மரணந்தான் உனக்குண்டோ!

### நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டும் நிறைவேற்றப்படாத நிலையில்

# கைத்தறி நெசவாளர்கள் வாழ்வாதாரத்துக்கு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் சி.என். அண்ணாதுரை கேள்வி!

*புதுடெல்லி, ஆக. 7-*

*தொழில்துறையின் நவீன மாற்றங்களால் நசிந்து வரும் பாரம்பரிய கைத்தறி நெசவுத்தொழிலை பாதுகாக்கும் வகையில், அத்தொழிலில் ஈடுபட்டு வரும் கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஒன்றிய அரசு பல்வேறு நலத்திட்டங்களை அறிவிப்பு செய்துள்ளது. ஆனால், அவை நிறைவேற்றப்பட்டுள்ளதா என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.*

*அதன் விவரம் வருமாறு:*

*(அ) கைத்தறி நெசவாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை அரசு கவனத்தில் கொண்டுள்ளதா;*

*(ஆ) அப்படியானால், அதன் விவரங்களை அளிக்கவும். கைத்தறி நெசவாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை அரசால் தீர்க்க முடியாமல் போனதற்கான காரணங்கள் இருந்தால் அது பற்றியும் குறிப்பிடவும்.*

*(இ) கைத்தறி நெசவாளர்களுக்காக வகுக்கப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களை,*

*அவை குறித்த போதுமான அடிப்படைத் தரவுகள் இல்லாதது மற்றும் பொருத்தமற்ற செயல்முறைகள் ஆகிய காரணங்களால் நிறைவேற்ற இயலவில்லையா, அவ்வாறாயின் அதன் விவரங்களை தெரிவிக்கவும்;*

*(ஈ) இவ்விஷயத்தில் அறிவியல் பூர்வமான அணுகுமுறைகளை கடைப்பிடிக்க ஒன்றிய*



*அரசு உத்தேசித்திருந்தால் அதன் விவரங்கள் பற்றி தெரிவிக்கவும்;*

*(உ) நெசவாளர்கள் தங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கான வசதிகளை அளிப்பதில் ஏதாவது திட்டங்கள் நிறைவேறியுள்ளதா, அந்த வகையில் மாநில வாரியாக கடந்த மூன்று ஆண்டுகளில் பயனடைந்த நெசவாளர்களின் மொத்த எண்ணிக்கை பற்றி குறிப்பிடவும்;*

*(ஊ) கைத்தறி நெசவாளர்கள், விசைத்தறி மற்றும் மில் தயாரிப்பு போன்ற தொழில் போட்டிகளை எதிர்கொண்டு வரும் நிலையில் கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?*

*மேற்கண்ட கேள்விகளுக்கு ஒன்றிய ஜவுளித் துறை இணையமைச்சர் ஸ்ரீமதி தர்ஷனா ஜர்தோஷ் எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் வருமாறு:*

*(அ) மற்றும் (ஆ): நாடு முழுவதும் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனை மேம்படுத்தவும், கைத்தறித் தொழிலாளர்களின் நலனுக்காகவும் மத்திய ஜவுளி அமைச்சகம் பின்வரும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.*

*1. தேசிய கைத்தறி மேம்பாட்டு திட்டம்;*

*2. மூலப்பொருட்கள் வழங்கும் திட்டம்*

*மேற்கண்ட திட்டங்களின் கீழ், தகுதி வாய்ந்த கைத்தறி முகமைகள் மற்றும் நெசவாளர்களுக்கு மூலப்பொருட்கள் வாங்குதல், கைத்தறிகளுக்கான தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உபகரணங்கள் வாங்குதல், சூரிய ஒளி விளக்குகள் அமைத்தல், தறிக்கூடங்கள் அமைத்தல், உற்பத்தி மற்றும் வடிவமைப்பு மேம்பாடு, தொழில்நுட்ப வசதிகள் மற்றும் பொது உள்கட்டமைப்பு வசதி, கைத்தறி தயாரிப்புகளை உள்நாட்டு / வெளிநாட்டு சந்தைகளில் சந்தைப்படுத்துதல், நெசவாளர் முத்ரா திட்டத்தின் கீழ் சலுகை கடன்கள் மற்றும் சமூக பாதுகாப்பு ஆகிய நிலைகளில் நிதி உதவிகள் வழங்கப்படுகிறது.*

*(இ): கைத்தறி நெசவாளர்கள் தொடர்பான அடிப்படைத் தரவுகள் 2019-20-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 4-வது அகில இந்திய கைத்தறி கணக்கெடுப்பில் பெறப்பட்டுள்ளன.*

*(ஈ) கைத்தறி நெசவாளர்களுக்கு நேரடி பணப் பரிமாற்றம் (டி.பி.டி), கைத்தறி நெசவாளர்களுக்கு அரசு இசந்தை (ஜி.இ.எம்), Indiahandmade.com போன்ற கைவினைப் பொருட்களின் விற்பனைக்கான இணைய தளம் ஆகியவற்றின் மூலம் நன்மைகளை பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அறிவியல் பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றி, நெசவாளர்களின் தயாரிப்புகளுக்கு லாபகரமான விலை கிடைப்பதை உறுதி செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.*

*(உ) கைத்தறி முகமைகள் மற்றும் நெசவாளர்கள் தங்கள் தயாரிப்புகளை வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக விற்பனை செய்யும் சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குவதற்காக தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தின் (என்.எச்.டி.பி) ஒரு அங்கமாக கைத்தறி சந்தைப்படுத்தல் உதவி (எச்.எம்.ஏ) திட்டத்தை ஜவுளி அமைச்சகம் நாடு முழுவதும் செயல்படுத்தி வருகிறது.*

*கடந்த மூன்றாண்டுகளில் கைத்தறி விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் பயனடைந்த நெசவாளர்களின் எண்ணிக்கை மற்றும் மாநில வாரியான விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளன.*

*கைத்தறித் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க, மத்திய அரசு கைத்தறி (உற்பத்திக்கான பொருள்கள் ஒதுக்கீடு) சட்டம், 1985ஐ அறிவித்துள்ளது. கைத்தறியில் உற்பத்தி செய்வதற்காக சில தொழில்நுட்ப விவரக் குறிப்புகள் கொண்ட 11 ஜவுளி தயாரிப்புகள் பிரத்தியேகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.*

*இவ்வாறு ஒன்றிய அமைச்சர் எழுத்துப்பூர்வமாக பதிலளித்துள்ளார்.*

# கைவினைப்பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்த திட்டங்கள் உள்ளனவா?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி !

*புதுடெல்லி, ஆக.7-*

*திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கடந்த 2-ஆம் தேதியன்று, மக்களவையில், ஓவியங்கள், அணிகலன்கள் போன்ற கைவினைப்பொருட்களின் சந்தையை பெருக்கி ஏற்றுமதியை மேம்படுத்த ஒன்றிய அரசிடம் ஏதேனும் முன்முயற்சி கள் உள்ளனவா? என்றும் கைவினை கலைஞர்களுக்கான பயிற்சி அளிக்க அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு அளிக்க இயலும்? என்றும் ஒன்றிய அரசின் ஜவுளித்துறை இணையமைச்சர் திருமதி தர்ஷனா ஜாதோஷ் அவர்களிடம் கேள்வி எழுப்பினார்.*

*அதற்கு ஒன்றிய அரசின் ஜவுளித்துறை இணையமைச்சர், அளித்த பதில் பின்வருமாறு:-*

*தேசிய கைவினைப் பொருட்கள் மேம்பாட்டு திட்டத்தின் மூலமும், தொகுப்பு மேம்பாட்டு திட்டத்தின் மூலமும், கைவினைப் பொருட்களின் சந்தையைப் பெருக்கவும், கைவினை கலைஞர்களுக்கு பயிற்சி அளிக்கவும், இப்பொருட்களின் ஏற்றுமதி வாய்ப்பினை பெருக்கிடவும், அனைத்து இந்திய மாநிலங்களிலும் ஒன்றிய*



*அரசு தேவையான முயற்சிகளை எடுத்து வருவதாகவும், கைவினைப் பொருட்களின் ஆராய்ச்சிக்கு தேவையான நிதி சலுகைகளை அளித்து வருவதாகவும் கைவினைப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க தேவையான கட்டமைப்புகளை உருவாக்கி உள்ளதாகவும், வெளிநாட்டு சந்தைகளுக்கான ஏற்றுமதியை ஊக்குவித்து வருவதாகவும், கைவினை கலைஞர்களுக்கான கடன் வசதியை முத்ரா லோன் திட்டத்தின் மூலம் பல்வேறு நிதிச் சலுகைகளை அளித்து வருவதாகவும், ஒன்றிய அரசின் ஜவுளித்துறை இணையமைச்சர் திருமதி தர்ஷனா ஜாதோஷ், மக்களவையில் தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு,விரிவான பதிலை அளித்துள்ளார்.*


### கோவை தெற்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் தேர்தல் முடிவு !

## தலைமைக் கழக அறிவிப்பு!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், கோவை தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட என். வேலுச்சாமி அவர்கள் மறைவெய்திய காரணத்தால்; கோவை தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2023, ஆகஸ்ட் 5 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்." என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

கோவை தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு திருமதி. வே.சாந்தாமணி அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**கோவை தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக,**
திருமதி. **வே. சாந்தாமணி**, *எண்.2/148, வெடியன் தோட்டம், பனப்பட்டி, கோவை641 201.அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.*

"அண்ணா அறிவாலயம்'
சென்னை 18
நாள் : 05- 08 - 2023.

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.


# ஆயிரம் விளக்கில் கலைஞர் நினைவு நாள் நிகழ்ச்சி!

*சென்னை, ஆக.6-*

*ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112வது வட்டக் கழகத்தினருக்கு வட்டச்செயலாளர் வரதை த.பரி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு தினம் (7.8.2023 - திங்கள்) காலை 1. டிரஸ்ட்புரம் 6வது தெரு , 2 தாஸ்புரம், 3 மைனர் டிரஸ்ட்புரம், 4 புலியூர் 1வது பிரதான சாலை, 5 வரதராஜபேட்டை, 6 சுபேதார் தோட்டம், 7 ஐக்கரியா காலனி, 8 நேரு தெரு, 9 சூளைமேடு காந்தி சிலை, 10 சௌராஸ்ட்ரா 1வது தெரு ஆகிய மேற்கண்ட இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் துவி ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட கிளை நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கழக செயல் வீரர்கள் அஞ்சலி செலுத்துகிறார்கள்.*

*இவ்வாறு வட்டச் செயலாளர் வரதை த.பரி கேட்டுக் கொண்டுள்ளார்.*

